மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 54/22 |
| பெயர் | : | உஷாராணி (DW2) |
| க/பெ. | : | கனகராஜ் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21 th day of March 2025

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எங்கள் வீட்டில் தென்பகுதியில் உள்ள இடம் செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான்.இடத்தின் மேல்பகுதியை செல்வராஜ் என்பவர் மகன் பாலமுருகன் அனுபவம் செய்து வருகிறார் என்றால் முதலில் ஒரு பிளாட்டாக இருந்தது தற்போது இரண்டாக பிரிக்கப்பட்டுவிட்டது.அதன் மேல்புறத்தில் பாலமுருகனும் கீழ்பகுதியை செல்வராஜின் தம்பி மகன் சதிஷ்குமா ஆண்டிச்சி வீடு என்றால் சரிதான்.

ரும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.எங்கள் வீட்டிற்கு வடக்கு பகுதி

2)ஆண்டிச்சியின் வீட்டிற்கு கிழக்கே தாசையா நாயக்கர் என்பவரின் இடம் என்றால் இல்லை செல்வராஜ் நாடாரின் இடம் தான் உள்ளது, அதில் ஒரு ஏர்டல் டவர் உள்ளது.இந்த வழக்கு 2017 ஆம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.சர்வே எண் 519 ல் வீடு கட்டியதாக சொல்லியுள்ளதற்கு பட்டா எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், இனி தாக்கல் செய்வேன்.

3)என் கைவசம் பட்டா உள்ளது.தற்போது நான் இருக்கும் வீடு 2008 ல் கட்டியது.15.07.2011 ல் பஞ்சாயத்து அனுமதி வழங்கியதாக சொல்லியுள்ளதில் மேற்படி அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீடு மாறும் போது அது தொலைந்துவிட்டது.2012 ல் வீடு மாறினோம்.பஞ்சாயத்து போர்டு அனுமதி பஞ்சாயத்து அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரிதான்.அதை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான்.

4)அதை தாக்கல் செய்ய நான் எந்த முயற்சியும் செய்தோமா என்றால் பஞ்சாயத்து அலுவலகம் சென்று கேட்டேன் அது தீ விபத்தில் எரிந்து விட்டதாக சொன்னார்கள். மேற்படி விவரத்தை வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல.நான் குடியிருந்து வரும் வீடு என்னுடைய பெயரில் உள்ளது.என் பெயரில் உள்ளது என்பதை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.2017 லிருந்து இந்த வீடு என்னுடைய பெயரில் உள்ளது.

5)வீடு என்னுடைய பெயரில் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.என் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களில் மேற்படி ஆவணம் இல்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன்.நான் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீகள் என்னுடைய பெயரில் இல்லை என்றால் சரிதான், என் கணவரின் பெயரில் உள்ளது.இந்த வழக்கில் எந்த இடத்திலும் சொத்து என்னுடைய பெயரில் உள்ளது என்பதை சொல்லவில்லை தற்போது தான் சொல்கிறேன் என்றாலும் என் கணவரின் பெயரில் சொத்து இருப்பதாக தான் இதுவரை வழக்காடி வருகிறோம் என்றாலும் சரிதான்.

6)கிழமேலாக மொத்தம் 68 அடி எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது.மேற்படி அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.மேற்படி விவரத்தை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.நீள ,அகல அளவுகள் வழக்கிற்காக கற்பனையாக சொல்கிறேன் என்றால் இல்லை அடங்கலின் அடிப்படையில் சொல்கிறேன்.என் வீட்டின் மேல்பகுதில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது.ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே எங்கள் வீடு , வாதியின் தபசில் சொத்து , எங்கள் வீட்டின் வடபுறத்தில் உள்ள வீடு ஆகியவற்றை பிரிக்கும் விதமாக கிழமேல் தார் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக பத்து அடி அகலம் 60 அடி நீளம் தென்வடல் பாதை உள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கு மேற்கே பாதை கிடையாது .கிழக்கே தான் பொதுபாதை உள்ளது.

7)ஆரம்பசுகாதார நிலையத்திற்கும் செல்லும் மின்இணைப்பும், குடிநீர் குழாயும் அந்த பொதுபாதை வழியாக தான் செல்லும் என்றால் குடிநீர் குழாய் மட்டும் செல்கிறது ,மின்இணைப்பு கம்பி செல்லவில்லை.நான் சொல்லும் கிழமேல் பாதை சதிஷ்குமாரின் இடத்திற்கு கிழக்கே தான் பாதை உள்ளது என்றால் சரிதான்.தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார்,அவர் எங்களிடம் எதுவும் சொல்லாமல் ஒரு தலைபட்சமாக எழுதிவிட்டார்.நீதிமன்ற ஆணையர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்திருக்கும் விவரம் எனக்கு

தெரியும்.ஆட்சேபனை உள்ளது என்று நீதிமன்றத்தில் எழுத்து பூர்வமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

8)புதிய வீடு கட்டுவதற்கு முன்பாக அதே இடத்தின் கீழ்பகுதியில் பழைய வீடு இருந்தது என்றால் இல்லை, தொழுவமும் படப்பும் தான் அதில் இருந்தது.2017 ல் என் பெயரில் ஆவணம் ஏற்பட்ட போதுதான் புது வீடு கட்டினோம் என்றால் இல்லை 2008 ஆம் வருடமே கட்டிவிட்டோம்.பஞ்சாயத்து அலுவலகத்தில் அனுமதி என் கணவரின் பெயரில் வாங்கினோம்.பொதுவாக பஞ்சாயத்து அலுவலகத்தில் கட்டிடம் இருந்தால் தான் அனுமதி கொடுக்கப்படும் என்றால் நாங்கள் தொழுவம் வைத்திருந்தோம்.தொழுவம் வைத்திருந்தபோதே நாங்கள் தீர்வை கட்டிவிட்டோம்.

9)வழக்கில் தாக்கல் செய்துள்ள பிவாசா ஆவணம் 4 ஆன தீர்வை ரசீது எப்போது செலுத்தியது என்றால் வீடு கட்டிய பின்னர் செலுத்தியது அதற்கு முன்பு உள்ளது தொலைந்துவிட்டது.தொழுவம் இருக்கும்போதே மின்இணைப்பு எடுத்துவிட்டோமா என்றால் இல்லை.மின் இணைப்பு எந்த கதவு எண்ணுக்காக செலுத்தப்பட்டது என்பது பிவாசா ஆவணம் 3 ல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.பிவாசாஆவணம் 3 ஆனது கதவு எண் 5/350 க்கானது கிடையாது என்றால் சரியல்ல.

10)நான் புதிய வீடு கட்டியதற்கு பின்னர் உண்டான ரசீது இது கிடையாது என்றால் சரியல்ல.தற்போது வரை அந்த மின்இணைப்பு என் கணவரின் பெயரில் உள்ளது.என்னிடம் காட்டப்படும் பிவாசா ஆவணம் 5 ல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கீழ்பக்கம் காலி இடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் பூமியில் வீடுகள் மற்றும் டவர் உள்ளது.நான் தாக்கல் செய்த பிவாசா ஆவணம் 5 ல் ஆரம்ப சுகாதாரநிலையத்திற்கு கீழ்ப்பக்கம் எங்களுடைய வீடு காட்டப்படவில்லை என்றால் சரியல்ல.ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒட்டியுள்ள காலி இடமாக தான் உள்ளது என்றால் சரியல்ல, இரண்டு பக்கமும் நாலு நாலு வீடுகள் உள்ளது.

11)வாதி வழக்கு தாக்கல் செய்தபின்னர் தான் அவசரமாக என் பெயருக்கு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதனால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அனுபவம் செய்து வந்தோம் அதன் அடிப்படையில் என் கணவர் எனக்கு நன்கொடை ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார்.அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால்

அந்த ஆவணம் 2017 ஆம் வருடத்திற்கு பின்னர் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரியவந்திடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12)கட்டிடம் கட்டுவதற்கு மட்டும் தான் அனுமதி வழங்கப்படும் கட்டிடம் இல்லாததால் தான் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.வீடு கட்டிய பிறகு குளியல் அறை சில வருடங்கள் கழித்து தனியாக கட்டப்பட்டது என்றால் சரியல்ல, 2008 ல் வீடு கட்டும்போது சேர்த்து கட்டிவிட்டேன்.பாதையை ஆக்கிரமிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் குளியல் அறையை சரியாக பாதையில் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, வாதிகள் தான் நாங்கள் வீடு கட்டும்போது அளந்து கொடுத்ததார்கள் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.மேற்படி விவரத்தை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13)எங்கள் வீட்டிற்கு வடபகுதியில் தார் ரோடு உள்ளது என்றால் இரண்டு வீடுகள் தள்ளி மெயின்ரோடு உள்ளது.அந்த மெயின்ரோட்டில் இருந்து தென்வடலாக நான் குறிப்பிடும் இரண்டு வீட்டுகாரர்களுக்கும் தாவா சொத்திற்கு செல்லக்கூடிய வழி உள்ளது என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.